சுற்றுநிருபம்:- 05/2015

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
35, அம்மன் வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
2015.05.28

வடமாகாணத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்கள்
மற்றும் சமாசங்களின் தலைவர்களுக்கும்

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி செலுத்துதல்

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2012 இலக்க 2012.03.14 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் தற்போதைய வாழ்க்கைச் செலவுப்படியாக ரூபா 5850.00 செலுத்தப்பட்டு வருகின்றது. இதனை மீள் பரிசீலனை செய்த வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பொன்றை கூட்டுறவுப் பணியாளருக்கும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இப்படியை வழங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வல்லமை இருப்பதுடன் அது தொடர்பாக சங்கங்களின் இயக்குனர் சபை திருப்தியடையும் அதே வேளை கிராமிய வங்கியில் பெறப்படும் இலாபத்தினைத் தவிர்த்து சங்கம் சுய முயற்சியால் இலாபம் ஈட்டுமாயின் கீழ்க்கண்டவாறு அமையும் படியை உரிய மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு வழங்க வேண்டும்.

**இச் சுற்று நிருபம் செயற்படும் நாளாகிய 2015.06.01ஆம் திகதி முதல் ரூபா 7800/= வாழ்க்கைச் செலவுப்படியாக வழங்கப்படல் வேண்டும். தற்காலிக, அமைய ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 260/= படி மாதம் 7800/= இற்கு மேற்படாதவாறு வழங்கப்படல் வேண்டும்.**

முன்னைய கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபங்களின் பிரகாரம் வழங்கப்பட்ட விசேடபடி ஏற்பாடுகள் தொடர்ந்தும் அவ்வாறே அமுலில் இருக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கான பங்களிப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை என்பன கணிப்பீடு செய்யும் போது இப்படிகள் உள்ளடக்கப்படுதல் ஆகாது.

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியருக்கு இப்படிகள் உரித்துடையதல்ல.

இவ்வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு வழங்குதல் தொடர்பாக சங்கத்தின் இயக்குனர் சபையால் எடுக்கப்படும் தீர்மானம் தொடர்பாக 2015.08.01ஆம் திகதியின் முன் உரிய மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு அறியத்தரப்படல் வேண்டும்.

இச்சுற்று நிருபம் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஒத்திசைவுடனும் கௌரவ மாகாண கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அவர்களது அங்கீகாரத்துடனும் வெளியிடப்படுகிறது.

பொ.வாகீசன்

செயலாளர்

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை